
## தந்தை பெரியார் பிறந்த நாள்

# “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஏற்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!



“தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் 'சமூகநீதி நாளாக' கடைபிடிக்கப்படும் என்றும்; அப் பிறந்த நாள் அன்று “சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்” என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 6.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற் கிணங்க;

தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2024 அன்று காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, கழக அமைப்புச் செயலாளர் **ஆர்.எஸ்.பாரதி** தலைமையில் “சமூகநீதி நாள்” உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறும். இதில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நாள் : 15.9.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தந்தை பெரியார் பிறந்த நாள்

## “சமூக நீதி நாள் உறுதிமொழி”

- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அன்பு நெறியும் - 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன்!
- சுயமரியாதை ஆளுமைத்திறனும் பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!
- சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!
- மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!
- சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

## பதவி விலகுவதாகப் பேட்டி!

# ஆங்கிலேயர் ஆட்சியை காட்டிலும் பா.ஜ.க. ஆட்சி கொடுமையானது!

## அரவிந்த் கெஜ்ரிவால் கடும் தாக்கு!



புதுடெல்லி, செப். 16 -

டெல்லி முதலமைச்சர் பதவியிலிருந்து இன்னும் 2 நாட்களில் விலக உள்ளதாக, அம்மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் ஜாமின் பெற்ற முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், திகார் சிறையில் இருந்து ஜாமினில் விடுதலையானார். விடுதலையான பின்னர், முதல்முறையாக நேற்று டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று அரவிந்த் கெஜ்ரிவால் உரையாற்றினார்.

அப்போது பேசிய, கெஜ்ரிவால், ஆங்கிலேயர் ஆட்சியை காட்டிலும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி கொடுமையானது என்றும், தாம் எந்த தவறும் செய்யாத நிலையில், தம்மை சிறையில் அடைத்து பா.ஜ.க. கொடுமைப்படுத்தியதாக குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர், டெல்லி முதலமைச்சர் பதவியிலிருந்து இன்னும் 2 நாட்களில் விலக உள்ளதாக அரவிந்த் கெஜ்ரிவால் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

முதலமைச்சர் பதவியை நான் ராஜினாமா செய்கிறேன். பொதுமக்கள் என்னை நேர்மையானவன் என கூறும் வரை நான் முதலமைச்சர் நாற்காலியில் அமர மாட்டேன் வீடு தோறும் பொதுமக்களை நேரில் சந்தித்து கருத்து கேட்பேன்.

எனது நேர்மைக்கு மக்களிடம் நற்சான்றிதழ் பெற்ற பிறகே முதலமைச்சர் நாற்காலியில் அமர்வேன். நிரபராதி என நிரூபிக்கும் வரை, முதலமைச்சர் நாற்காலியில் அமர மாட்டேன்.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

## முதல்வரின் அமெரிக்கப் பயணம்

# ‘சென்றோம் வென்றோம்’ என்ற புதிய அத்தியாயத்தைப் படைத்துள்ளது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 16 -

முதல்வரின் அமெரிக்கப் பயணம் ‘சென்றோம் வென்றோம்’ என்ற புதிய அத்தியாயத்தைப் படைத்துள்ளது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து 15.09.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:


தினகரன்

புதிய அத்தியாயம்

முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு கொண்டு வந்த முத்தான திட்டங்கள் அனைத்தும், தற்போது மக்கள் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030ம் ஆண்டுக்குள் 1டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற மாபெரும் இலக்கோடு, முதல்வரின் சாதனை பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நிலத்திற்கு அமெரிக்காவின் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகளை முன்னெடுத்தார் முதல்வர். இதற்காக கடந்த ஆகஸ்ட் 27ம் தேதி முதல், 15 நாட்கள் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார் . முதல் நாளே சான்பிரான் சிஸ்கோ, சிகாகோவில் முதலீட் டாளர்களை சந்தித்தார். முதல்வரின் அழைப்பை ஏற்று கடந்த 12ம்தேதி வரை, 18 நிறுவனங்கள் 7,616 கோடிக்கான ஒப்பந்தங்களை முதல்வர் முன்னிலையில் மேற்கொண்டன.

அமெரிக்காவில் உள்ள உலக பிரசித்தி பெற்ற தலைசிறந்த 23 நிறுவனங்களுடன் முதல்வரின் சந்திப்பு நடந்தது. இதில் 19நிறுவனங்கள் தொழில் முதலீடு தொடர்பான ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது. சான்பிரான்சிஸ்கோவில் 8நிறுவனங்கள், சிகாகோவில் 8நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்த 19 ஒப்பந்தங்கள் மூலம் ரூ.7,618கோடி முதலீடு தமிழகத்திற்கு குவிந்துள்ளது. இதன் மூலம், மொத்தம் 11,516பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. திருச்சி. மதுரை, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, செங் கல்பட்டு, காஞ்சிபுரம் என்று பல்வேறு மாவட்டங்களில் தொழில்கள் தொடங்கப்பட உள்ளது. மேலும் பலநிறுவனங்கள் நமது தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள் ளது. சென்னையில் போர்டு நிறுவனம் மீண்டும் உற்பத்தியை தொடங்க உள்ளது. இதற்கான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு உத்தர விட்டுள்ளேன் என்று முதல்வர் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், நான் முதல்வன் திட்டம் வழியாக வளமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். இதற்குரிய செயற்கை தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்காக, கூகுள் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப் பட உள்ளது என்ற தகவலையும் முதல்வர் தெரிவித்துள்ளார். இது ஒருபுறமிருக்க நாடி வந்த அனைத்து நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் போடவில்லை. 100சதவீதம் தொழில் தொடங்க வாய்ப்புள்ள நிறுவனங்களோடு மட்டுமே ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்ற தகவலும் வெளியாகி உள்ளது. இதன்மூலம் ‘சென்றோம் வந்தோம்’ என்ற விதியை மாற்றிய முதல்வர் ‘சென்றோம்வென்றோம்’ என்ற புதிய அத்தியாயத்திற்கு அடித்தளம் அமைத்துள்ளார்.

அயல்மண்ணின் தொழில் முதலீட்டாளர் சந்திப்பே பிரதான இலக்கு என்ற போதிலும் தமிழ் சங்கங்கள், தமிழ்அமைப்புகளின் நிர்வாகிகள், அமெரிக்கவாழ் தமிழர்கள் என்று பல்வேறு தரப் பினரையும் சந்தித்தார் முதல்வர். அவர்களின் ஈடற்ற வரவேற்பு, நமது பண்பாட்டையும், கலாச் சாரத்தையும் மீண்டும் ஒரு முறை அயல்மண்ணில் அழுத்தமாக பதிவு செய்துள்ளது. 15நாட்கள் அமெரிக்க பயணம் முடித்து தாய்நிலத்தில் பாதம் பதித்த முதல்வரை அகம் மகிழ்ந்து வரவேற்றனர் நமது மக்கள்.

‘‘அமெரிக்கா அரசுமுறை பயணம் வெற்றி பயணமாகவும், சாதனை பயணமாகவும் அமைந் திருக்கிறது. இது எனக்கான தனிப்பட்ட வெற்றி அல்ல. தமிழக மக்களுக்கான வெற்றிப்பயணம்,” என்று முதல்வர்குறிப்பிட்டுள்ளது மக்களின் மகிழ்ச்சியை மேலும் இரட்டிப்பாக்கியுள்ளது என் றால் அது மிகையல்ல.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## குத்தாலம் பி.கல்யாணம் தலைமை!

# குத்தாலத்தில் முன்னாள் அமைச்சர் கோசி.மணி சிலை திறப்பு விழா!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மயிலாடுதுறை, செப்.16 -

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றிய தி,மு.க. அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு தம்பியாக, சோழமண்டல தளகத்தர் முன்னாள் அமைச்சர் கோசி. மணி 96வது பிறந்த நாள் விழா மற்றும் கோசி.மணி முழு உருவ சிலை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், சிலை அமைப்பு குழு தலைவர் மற்றும் செயலாளருமான குத்தாலம் பி.கல்யாணம் தலைமைதாங்கினார். குத்தாலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கு.வைத்தியநாதன் வரவேற்றார். முன்னாள் அமைச்சர் கோசி.மணி திருஉருவ சிலையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்பு துணைச் செலயாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கோ.ஜி.சினிவாசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி முன்னாள் அமைச்சர் கோசி.மணி குடும்பத்தை சேர்ந்த ஆடுதுறை பேரூர் செயலாளர் கோசி. இளங்கோ, அன்பு, புகழேந்தி, கீதா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோசி.ம. திருமாவளவன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செலயாளர்கள் மங்கை எம்.சங்கர், என். இளையபெருமாள், எம். அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்த.விஜய குமார், பஞ்சுகுமார், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், ப.முருகமணி, ஞான.இமையநாதன், ஏ.ஆர்.ராஜா, வலைங்கமான் வி.அன்பரசன், கீழ்வேளூர் தெற்கு கே. பழனியப்பன், குடவாசல் பி.பிரபாகரன், நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்ப ராயன், பொதுக் குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்செண்ட், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் க.அறிவழகன், எம். கே.மருது, இரா.மனோகரன், வி.எஸ்.என்.செந்தில், பிரபாகர், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கிதா மாரியப்பன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், டாக்டர் செல்வம், ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் ரவி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் குத்தாலம் பேரூர் கழகச் செயலாளரும், பேரூராட்சி துணைத்தலைவர் எம்.சம்சுதீன் நன்றி கூறினார். முன்னதாக குத்தாலம் கடைத் தெருவில் உள்ள அண்ணா சிலையில் இருந்து குத்தாலம் ஒன்றிய அலுவலகம் வரை கோசி. மணி பிறந்த நாள் ஊர்வலம் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் தலைமையில் நடைபெற்றது.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்துக்கு மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஒன்றிய கழக செயலாளர் சி.எல். ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கதிரேசன், மாநில சிறுபான்மை யினர் நல உரிமைபிரிவு துணை செயலாளர் நூருல்லா, பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.அசோக், மண்டல குழுத் தலைவர்கள் வீனஸ்நரேந்திரன், வெங்கடேசன், யூசுப் கான்,மாவட்ட அயலக அணி துணை தலைவர் பி.சேட்டு,பகுதி செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி,எம்.ஏ. கணேஷ்சங்கர், சத்தியமூர்த்தி, முனவர்பாஷா, சசிகுமார், மாநகர துணை செயலாளர் தங்கமணி, மாமன்ற உறுப்பினர் டி.சக்கரவர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, ஆனந்தன்,மாநகர துணை செயலாளர் முன்னாஷெரீப் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக பவள விழாவினையொட்டி, திருச்சியில் உள்ள தமது இல்லத்தில் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.